## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 21/2024**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ராஜா **PW.1** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.11.2024

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | | |
| Father Name | : பொன்னுசாமி | Court | : |
| Village | : ஆக்கூர். | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 35 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அந்த சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தார். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான்.

எனது தகப்பனார் பொன்னுசாமி மற்றும் கலியபெருமாள் பெயரில் தரங்கம்பாடி மண்டல துணை வட்டாச்சியரால் வழங்கப்பட்ட மனைவாரி தோராண பட்டாவின் அசல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தரங்கம்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண் 34/2021 ல் 20.07.2023 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தரங்கம்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண் 34/2021 ல் 20.07.2023 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

06.10.2021 தேதியிட்ட  பொன்னுசாமி அவர்களின் இறப்பு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி வாதி  தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.